# ஜனவரி – 28 – திங்கள்
## புனித தோமஸ் அக்குவைனாஸ்

**"தூய ஆவியாரைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப்பெறார்"**
**( மாற்3 :29)**

### முதல் வாசகம் : எபிரேயர் 9 : 15, 24 - 28

சகோதரர் சகோதரிகளே, இயேசு புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராயிருக்கிறார். கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் அவரால் வாக்களிக்கப்பட்ட என்றும் நிலைக்கும் உரிமைப்பேற்றைப் பெறுவதற்கென்று இந்த உடன்படிக்கை உண்டானது. இது ஒரு சாவின் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சாவு முந்திய உடன்படிக்கையை மீறிச் செய்த குற்றங்களிலிருந்து மீட்பளிக்கிறது. அதனால்தான் கிறிஸ்து மனிதரின் கையால் அமைக்கப்பட்டதும் உண்மையான தூயகத்திற்கு முன்னடையாளமாய் இருப்பதுமான இவ்வுலகத் தூயகத்திற்குள் நுழையாமல் விண்ணுலகிற்குள்ளேயே நுழைந்திருக்கிறார். அங்கே இப்போது நம் சார்பாகக் கடவுளின் திருமுன் நிற்கிறார். தலைமைக்குரு விலங்குகளின் இரத்தத்துடன் ஆண்டுதோறும் தூயகத்திற்குள் செல்வார். அதற்கு மாறாக, கிறிஸ்து தம்மையே ஒரே முறை பலியாகக் கொடுத்தார். அதை மீண்டும் மீண்டும் செய்யவில்லை. அவ்வாறு செய்திருப்பாரென்றால், உலகம் தோன்றிய காலந்தொட்டு, அவர் மீண்டும் மீண்டும் துன்புற்றிருக்கவேண்டும். அதற்கு மாறாக, உலகம் முடியும் காலமான இப்போது தம்மையே பலியாகக் கொடுத்து, பாவங்களைப் போக்குவதற்காக ஒரேமுறை உலகில் வெளிப் படுத்தப்பட்டார். மனிதர் ஒரே முறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித் தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கெனவுள்ள நியதி. அவ்வாறே, கிறிஸ்துவும் பலரின் பாவங்களைப் போக்கும் பொருட்டு, ஒரேமுறை தம்மைத்தாமே பலியாகக் கொடுத்தார். அவர் மீண்டும் ஒருமுறை தோன்றுவார். ஆனால், பாவத்தின் பொருட்டு அல்ல, தமக்காகக் காத்திருப்பவர்களுக்கு மீட்பு அருளும் பொருட்டே தோன்றுவார்.

**பதில்பாடல் :** அவரது வியத்தகு செயல்களுக்காய் புதியதோர் பாடல் பாடுங்கள்.

### நற்செய்தி : மாற்கு 3 : 22 - 30

அக்காலத்தில், எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர், "இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது" என்றும் "பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆகவே அவர் அவர்களைத் தம்மிடம் வரவழைத்து அவர்களுக்கு உவமைகள் வாயிலாகக் கூறியது "சாத்தான் சாத்தானை எப்படி ஓட்டமுடியும்? தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் நிலைத்து நிற்க முடியாது. தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த வீடும் நிலைத்து நிற்க முடியாது. சாத்தான் தன்னையே எதிர்த்து நின்று பிளவுபட்டுப் போனால் அவன் நிலைத்து நிற்க முடியாது. அதுவே அவனது அழிவு. முதலில் வலியவரைக் கட்டினாலன்றி அவ்வலியவருடைய வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களை எவராலும் கொள்ளையிட முடியாது அவரைக் கட்டி வைத்த பிறகுதான் அவருடைய வீட்டைக் கொள்ளையிட முடியும். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தூய ஆவியைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப்பெறார் அவர் என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார். ஆனால் மக்களுடைய மற்றப் பாவங்கள், அவர்கள் கூறும் பழிப்புரைகள் அனைத்தும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்." "இவனைத் தீய ஆவி பிடித்திருக்கிறது" என்று தம்மைப் பற்றி அவர்கள் சொல்லி வந்ததால் இயேசு இவ்வாறு கூறினார்.

**தியானம் :** நம்பிக்கை என்பது எமது வாழ்வில் முக்கியமானது. சந்தேகம் வந்து விட்டால் எம் வாழ்வில் நிம்மதி இல்லை. இன்று நாம் கிறிஸ்த்தவர்களாக வாழ்வதன் அடிப்படையே நம்பிக்கை தான். அன்று யேசுவைப் பலர் நம்பவிலை அவரை பேய் பிடித்திருக்கின்றது என்றுகூட சொன்னார்கள். உண்மையை கண்டு கொள்ள அல்லது ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இன்றும் உண்மையை வெளிக்கொணர்பவர்களை பாராட்டாமல், அவர்கள் எப்படி இவ்வாறு செய்யலாம் என்று கேள்வி கேட்பவர்கள்தான் ஏராளம். ஆக்கபூர்மான மாற்றங்கள் செய்ய நினைப்பவர்களை தடுப்பதும், அவர்களைப்பற்றி விமர்சிப்பதும் அதிகம். ஏன்? பொறாமையா? விதண்டாவாதமா? வளர்ச்சியடைந்தநாமே இவ்வாறு செய்யும் போது அன்று சமுதாய தலைவர்கள் யேசுவிற்கு எதிராக செய்தது ஒன்றும் புதிதல்லவே? இன்று எமது இலங்கை நாட்டில் பதவிக்காக இடம்பெறும் போராட்டம் பெரிய செய்தியாக காணப்படுகின்றது. யாரும் மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை. தேர்தல் வரவேண்டும் என்கின்றார்கள். இதுயாரின் பணம்? உளைத்து வரிகட்டுகின்ற மக்களின் பணம் தானே? மக்களின் பணத்தை எடுத்து வீணடித்து விட்டு எவ்வாறு நல்லகாரியங்களை முன்னெடுக்கமுடியும்? நாமும் தீயசக்திகளுக்கு இடம் கொடாதபடி வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். யேசு எம்மை திக்கற்றவர்களாக விடவில்லை. தூய ஆவியாரை தந்துள்ளார். அவரின் வருகையால் தான் திருச்சபை எழுச்சிபெற்றது. பயந்து பூட்டிய கதவுகளுக்குள் மறைந்திருந்த சீடர்களை உலகெங்கும் சென்று பணிசெய்ய தூண்டியது. அதே ஆவியானவர் எம்மிலும் செயலாற்ற இடம் அழிப்போம். எம் உள்ளம் வெறுமையாக இருக்கவேண்டும். தீயஎண்ணங்களும், சிந்தனைகளும் இல்லாமல் இருக்கவேண்டும். அப்போதுதான் ஆவியானவர் எம்மில் குடி கொள்வார். அவரின் வழிநடத்தலில் எம்மால் வாழமுடியும்.